WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06
THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:10 13.11.2023 திங்கட்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# 2024 பட்ஜெட்

## அரசாங்கத்தின் முன்மொழிவுகள்

**ஓய்வூதியகாரர்களுக்கு 2,500 ரூபா அதிகரிப்பு**

**அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா அதிகரிப்பு**

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித்தொகை அதிகரிப்பு**

**பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு அதிகரிப்பு**

**அரச பணியாளர்களுக்கு முன்னரைப்போன்று இடர்கால கடன் மீண்டும் வழங்கப்படும்.**


**பெருந்தோட்ட மக்களுக்கு வீடமைக்க நிதி ஒதுக்கீடு**

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் சபையில் முன்வைத்து உரையாற்றிய போது,

வரவுக்கேற்ற செலவைக் கடந்த ஆட்சியாளர்கள் செய்யவில்லை. இலவச நிவாரணங்கள், அதிகப்படியான சம்பளம், தேவையற்ற செலவுகள் காரணமாக நாங்கள் உலகில் கடன்பட்டோம். வங்குரோத்தானோம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எங்களுடன் மக்களும் ஒத்துழைத்தார். தடம்புரண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினோம். நீண்டகால திட்டங்களை உருவாக்கும் நேரம் வந்துவிட்டது. அரசியல் இலாபம் கருதி மட்டும் செய்யப்படும் வேலைகள் வெற்றியளிக்காது. அதுவே வரலாறு கற்றுத் தந்த பாடம். அரசியல் தேவைகளுக்காக பொய் கூறவேண்டாம்.

சம்பள அதிகரிப்பினை கண்டபடி செய்ய முடியாது. அரச வருமானத்தை அதிகரித்தால் மட்டும் செய்யலாம். கடன் வாங்கியோ அல்லது பணத்தை அச்சிட்டோ நாங்கள் அதனை செய்தால் பொருளாதாரம் மேலும் மோசமடையும். மக்களின் பணத்தைத் திருடியவர்கள் மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்தை திருடியவர்களையும் கண்காணிக்க வேண்டும். திருகோணமலை எண்ணெய் குதங்கள் அபிவிருத்தி நுவரெலியா தபால் நிலைய கட்டட விவகாரம் என்பன எதிர்கால பொருளாதார மேம்பாட்டிற்கானவை. ஆனால், அவற்றைத் தடுப்பது அநீதி. அரச வளங்களைக் காக்க வேண்டும். ஆனால் அவை பயனுள்ள தாக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் மக்கள் எங்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பு, அவர்களின் தியாகம் காரணமாகவே பொருளாதாரம் மேம்பாடடைந்தது. இது வரையான பயணத்தின் வெற்றிக்கு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமே காரணம். அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டைப் போன்று பொருளாதார நரகத்தில் வீழ்ந்து விடாமல் முன்நோக்கிச் செல்வதற்கு அடித்தளமிட்டுள்ளோம் என்றார்.



**பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்.**

* அஸ்வெசும நிவாரணத்திற்காக மும்மடங்கில் நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு - அநீதி இடம்பெற்ற குடும்பங்களுக்கு நீதி வழங்கப்படும். சமுர்த்தி பணியாளர்களின் உதவியும் பெறப்படும். அங்கவீனமுற்றவர்களுக்கு 7500 ரூபாவும் முதியோர்களுக்கு 3000 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படும்.

* நிவாரணக் கடன்களுக்காக விசேட ஏற்பாடுகள். சிறு நடுத்தர வர்க்க கைத்தொழில்களை மேம்படுத்த விசேட நிதி ஒதுக்கீடு.

* விவசாயிகளின் காணி பிரச்சினையை தீர்க்க விசேட கொள்கை. அரச காணிகளைப் பயன்படுத்த தீர்மானம்

* அரச தொடர்மாடிகளில் வசிப்போருக்கு அவர்களின் வீடுகள் உரித்தாகும். அவர்களிடம் இனி வாடகை அறவிடப்பட மாட்டாது.

* மலைநாட்டு பகுதிகளில் கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்த விசேட நிதி ஒதுக்கீடு

* மலைநாட்டு பகுதிகளில் கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்த விசேட நிதி ஒதுக்கீடு

* விசேட திட்டங்களைக் கண்காணிக்க குழுவொன்று நியமனம். அரச நிதிக் கட்டுப்பாடு உட்பட வெளிப்படைத் தன்மை கடைப்பிடிக்கப்படும்.

(பக்:02)

# 2024 பட்ஜெட்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

* வீதிகள் புனரமைக்க 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

* கல்வி மறுசீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு - அதற்காக விசேட திட்டம் வகுப்பு

* உயர்தர வகுப்பில் சித்தியடையும் மாணவர்களுக்கு விசேட செயற்திட்டங்கள். புதிய நான்கு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும்.

* அரச துறையின் மாதாந்த சம்பளத்திற்காக 93 பில்லியன் ரூபா, காப்புறுதி, மருந்துகள், ஓய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபா, கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 03 பிரதான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 383 பில்லியன் ரூபா அரசு செலவிடும்.

*பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களை அமைக்க விசேட நிதி ஒதுக்கீடு. அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை அமைக்க சட்டத்தில் திருத்தம் செய்து இடமளிப்பு

* வர்த்தக வங்கிகள் ஊடாக மாணவர் கல்விக் கடன்-தொழில் கிடைத்த பின்னர் அவர்கள் மீள் செலுத்தக்கூடிய ஏற்பாடு

* பல்கலை தகுதி பெறாத மாணவர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்பு - அவர்களுக்கு விசேட பயிற்சியளிக்க நிதி ஒதுக்கீடு

* அனைவருக்கும் பாடசாலைகளில் விசேட ஆங்கிலக்கல்வித்திட்டம் அறிமுகம் - மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதித் திட்டம் மீண்டும் அறிமுகம்.

* மருத்துவத்துறை பதவியுயர்வுகள், இதர நிர்வாக செயற்பாடுகளை கிரமமாக மேற்கொள்ள திட்டங்கள்

* உள்நாட்டு மருத்துவத்துறையை மேம்படுத்த அரசாங்கம் தீர்மானம்-சர்வதேச மட்டத்தில் அதனை கொண்டு செல்ல நடவடிக்கை. அதற்கான முதலீடுகளுக்கும் வசதி. 100 மில்லியன் அதன் மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு.

* விவசாய, மீன்பிடித் துறைகளை மேம்படுத்த விசேட திட்டங்கள். இதற்காக தனியாரும் இணைக்கப்படுவர். 2500 மில்லியன் ரூபா இவற்றுக்காக ஒதுக்கீடு. பயிரிடப்படாத உலர் வலய காணிகளில் வேறு பயிர்ச்செய்கை. அதற்காக சட்டத்திருத்தம். அரச காணிகளில் 300 ஏக்கர் காணியும் இதற்காக ஒதுக்கீடு.

* மீன்பிடித்துறை மேம்பாட்டிற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. நன்னீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டிற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. *பால்பண்ணையாளர்களுக்கு விசேட திட்டங்கள் - பண்ணையாளர்களுக்கு விசேட கடன் திட்டங்கள்

* கட்டட நிர்மாணத்துறைக்கு விசேட திட்டங்கள் - அவர்களுக்கு அரச காணிகளை வழங்கத் திட்டம். நிர்மாணப்பணிகளுக்கு விசேட உதவித்திட்டங்கள் - வீடமைப்புத் திட்டங்களை வழங்கி நிர்மாணத்துறையினருக்கு ஊக்குவிப்பு

* துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய விசேட திட்டம். திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை

* வடக்கு கிழக்கில் மீள் குடியேற்றத்திற்கு 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

* காணாமல் போனவர்கள் குடும்பங்களுக்கு நட்டஈடு - அதற்காக 1500 மில்லியன் ஒதுக்கீடு.




# பிகாசோவின் ஓவியத்தின் விலை 140 மில்லியன் டொலர்


பாப்லோ பிகாசோவின் சிறந்த படைப்புகளில் ஒன்றான வுமன் வித் ஏ வாட்ச் எனும் ஓவியம் 140 மில்லியன் டொலருக்கு விற்பனையாகியுள்ளது. இந்த ஓவியம் 1932 ஆம் ஆண்டு வரையப்பட்டது. உலகில் இந்த ஆண்டு ஏலத்தில் அதிக தொகைக்கு விற்பனையான பொருள் பிகாசோவின் இவ் ஓவியம் என்பது குறிப்பிடத்தக்கது. உலகளவில் பாப்லோ பிகாசோவில் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களுக்கு அதிகளவில் மதிப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஓவியங்களில் பல புதுமைகளைப் படைத்த பாப்லோ பிகாசோவின் ஓவியங்கள் ஒவ்வொன்றும் பல கோடிக்கு ஏலத்தில் விற்பனையாகி வருகிறது. இந்த ஓவியங்கள் வாங்குவதை பெருமையாகவும் பொக்கிஷமாகவும் கருதுகின்றனர்.



# இராணுவத்தில் சேர விரும்பிய கொலைகாரனுக்கு மன்னிப்பு

கொடூரமாக கொலை செய்த கொலைகாரன் இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்ததை அடுத்து அந்த கொலைகாரனுக்கு மன்னிப்பு அளித்த ஜனாதிபதி குறித்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

ரஷ்யாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது காதலியை 111 முறை கத்தியால் குத்தி கொடூரமாக கொலை செய்தார். இதனை அடுத்து அவருக்கு 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.



இந்த நிலையில் தற்போது அவர் இராணுவத்தில் சேர்ந்து உக்ரைனுக்கு எதிராக போரிட விரும்புகிறேன் என விருப்பம் தெரிவித்தார்.

இதனை அடுத்து அவருக்கு ரஷ்யா ஜனாதிபதி புட்டின் மன்னிப்பு வழங்கி இராணுவத்தில் சேர்த்துக் கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளன.

இராணுவ உடையுடன் கொலைகாரன் தற்போது இருக்கும் புகைப்படம் பார்த்து தன் மனமுடைந்து விட்டதாக கொலை செய்யப்பட்ட பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளார்.

# நீருக்கடியில் அனகொண்டாவுடன் கட்டிப்புரளும் வாலிபர்

நாள்தோறும் இணையத்தில் புதுப்புது வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் வைரலாகிக்கொண்டே இருக்கும். அதில் விலங்குகள் சம்பந்தப்பட்ட வீடியோக்கள் பயனர்களை பெரிதும் கவரும்.



அந்த வகையில் நீருக்கடியில் பெரிய அனகொண்டாவை வாலிபர் ஒருவர் கட்டிப்புரளும் வீடியோ இன்ஸ்டாகிராமில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் பச்சை நிற பெரிய அனகொண்டா ஒன்றை வாலிபர் தனது கழுத்தில் வைத்துள்ளார். பின்னர் அந்த அனகொண்டாவுடன் நீருக்கடியில் மூழ்குவதும் அதனுடன் கட்டிப்புரள்வது போன்ற காட்சிகள் பயனர்களை வியக்க வைக்கிறது. சுமார் 83 ஆயிரத்துக்கும் மேற்பட்ட லைக்குகளை பெற்றுள்ள இவ்வீடியோவைப் பார்த்த பயனர்கள் பலரும் தங்களது கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

# காஸா மருத்துவமனையில் எரிபொருள் இல்லை

காஸாவில் உள்ள அல் ஷிஃபா மருத்துவமனையின் மோசமான நிலைமைக்கு உதவ 300 லீற்றர் எரிபொருளை வழங்குவதை ஹமாஸ் தடுத்துள்ளதாக இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால், ஹமாஸ் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.



காஸாவின் மிகப்பெரிய மருத்துவமனை குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு காரணமாக "செயல்படவில்லை" என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

அல் ஷிஃபா மருத்துவமனையின் கடைசி ஜெனரேட்டரில் வார இறுதியில் எரிபொருள் தீர்ந்ததால், மூன்று குறைமாத குழந்தைகளும் ஒன்பது நோயாளிகளும் இறந்ததாக ஹமாஸ் நடத்தும் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பட்டாசு புகையால் 2 ஆயிரம் பேர் மயக்கம்

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் மதுரவாடா பகுதியில் வீட்டின் முன்பாக பட்டாசு வெடித்து தீபாவளி கொண்டாடினர்.

அப்போது அந்தப் பகுதி முழுவதும் பட்டாசு புகை சூழ்ந்தது. பட்டாசு புகையை சுவாசித்த 2000ற்கும் மேற்பட்டோர் சுவாசக்கோ





ளாறு ஏற்பட்டு மயக்கமடைந்தனர். ஒரு சிலருக்கு கடுமையான கண் எரிச்சல் ஏற்பட்டது. இதையடுத்து நேற்று ஐதராபாத்தில் உள்ள அரசு கண் ஆஸ்பத்திரியில் 46 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

# இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா தீர்மானம் – இந்தியா ஆதரவு

"பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்கப் போவதாக உறுதி கூறியுள்ள இஸ்ரேல் அவர்கள் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பகுதியில் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலைக் கண்டித்து ஐ.நா சபையில் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு கண்டன தீர்மானம் கொண்டு வரப்பட்டது. கிழக்கு ஜெருசலேம் மற்றும் சிரியாவின் கோலன் ஆகிய பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதை, இந்தத் தீர்மானம் கண்டனம் செய்தது.தீர்மானத்தை ஆதரித்த 145 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. சில தினங்களுக்கு முன்பாக ஐ.நா சபையில் ஜோர்டன் கொண்டு வந்திருந்த ஒரு தீர்மானத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளாததால் கலந்துகொள்ளவில்லை. ஹமாஸ் அமைப்பினரின் பயங்கரவாத செயல்களை அத்தீர்மானம் கண்டிக்கவில்லை என இந்தியா குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# தனியார் கைகளுக்குச் செல்லும் அரச வளங்கள்

அரச சொத்துக்களையும் வளங்களையும் தனியாருக்குத் தாரை வார்க்கும் நிகழ்ச்சி நிரலை ஆளும் தரப்பினர் கடைப்பிடிப்பது வழமையானதே. எதிர்க் கட்சியில் இருக்கும்போது எதிர்ப்பவர்கள் ஆட்சிப்பீடம் ஏறியதும் தனியாரின் கைகளைக் கெட்டியாகப் பிடிப்பார்கள்.

கடந்த அரசாங்கம் நிலத்தை மட்டுமல்லாது கடலையும் கூறுபோட்டு விற்றது. அப்போது பலமாகக் குரல் எழுப்பி கோஷம் போட்டவர் கள் பிரிட்டிஷ் காலத்து அடையாளங்களில் கை வைக்கிறார்கள். வரலாற்று பெருமை மிக்க நுவரெலியா தபால் நிலையத்தை தனியாருக்கு அரசாங்கம் கொடுக்கப்போவதாக அறிந்த தபால் ஊழியர்கள் இரண்டு நாள் பணி பகிஷ்கரிப்புச் செய்தார்கள். அரசாங்கத்தின் அறிவித்தலின் பிரகாரம் அது ஏற்கெனவே கைமாறி விட்டது.

இது தொடர்பாக அரசாங்கம் தெரிவித்துள்ளதாவது, ஹோட்டல் துறைக்கு கையளிக்கப்படும் அஞ்சல் நிலைய கட்டடங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் நட்டத்தில் உள்ள அஞ்சல் துறைக்கு மாற்றப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க நுவரெலியா அஞ்சல் நிலையத்திற்கு மேலதிகமாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக ஹோட்டல் (விருந்தக) திட்டங்களுக்காக தியத்தலாவ மற்றும் காலியில் அமைந்துள்ள ஒல்லாந்தர் காலத்தின் இரண்டு அஞ்சல் நிலைய கட்டடங்களும் கண்டி மற்றும் நுவரெலியாவில் மேலும் மூன்று பழமையான கட்டடங்களும் வழங்கப்பட உள்ளன.

இந்நிலையில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, ஏற்கெனவே அஞ்சல் மா அதிபரிடம் இருந்து நுவரெலியா அஞ்சல் அலுவலக கட்டடத்தை பெற்றுள்ளது. அந்தக் கட்டட வளாகம் புதுப்பிக்கப்பட்டு, அஞ்சல் சேவைகள் செயல்பட அனுமதிக்கப்படும், அதே நேரத்தில் ஒரு ஏக்கர் நிலம் உட்பட மீதமுள்ள பகுதி ஹோட்டலுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் திட்டங்களுக்காக கையளிக்கப்படும் கட்டடங்களில், நுவரெலியாவில் உள்ள உள்நாட்டு இறைவரி மற்றும் துறைமுக அதிகார சபை விடுதிகளும் உள்ளடங்குகின்றன.

அதேவேளை கண்டியில் எஹெலேபொல வால்வா என்ற வரலாற்று கட்டடம் இந்தத் திட்டத்திற்காக வழங்கப்பட உள்ளது.

அத்துடன் கண்டி அஞ்சல் நிலையத்திலும் உத்தேச ஹோட்டல் திட்டத்தை முன்னெடுக்க, முதலீட்டாளர் ஒருவரைக் கண்டறியுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சிகள் இந்த விவகாரத்தைப் பெரிதாக எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. எதிர்க் கட்சிகள் இந்த விவகாரத்தில் தலையிட்டால் அவர்கள் காலத்து அரச வளங்கள் விற்பனை பற்றிய முழு விபரங்களும் வெளியாகுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

அரசவளங்கள், அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் போன்றவற்றை விற்பனை செய்யக்கூடாது என்ற சட்டம் ஒன்று அமுல்ப்படுத்தப்பட வேண்டும். அப்படியான ஒரு சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொது அமைப்புகள் குரல் எழுப்ப வேண்டும்.

# மயிலத்தமடு மாதவனையில் அத்துமீறி குடியேறியவர்கள் வெளியேற உத்தரவு

மட்டக்களப்பு-மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் அரச காணியில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் இன்று (13.11.2023) பிறப்பித்துள்ளார்.

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள குறித்த அரச காணியில் சட்டவிரோதமாக பெரும்பான்மையின மக்கள் குடியேறியுள்ளவர்கள் வெளியேறாத நிலையில் அவர்களுக்கு எதிராக மகாவலி அதிகாரசபையின் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

மட்டக்களப்பு-மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த கடந்த 2023.09.22 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தீர்ப்புக்காக மன்றுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவிக்கப்பட்ட 13 பேரும் இன்று நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் அந்தச் சட்டவிரோத குடியேற்றவாசிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி யுத்தத்திற்கு முன்னர் 12 சிங்கள குடும்பங்கள் குடியேறி வாழ்ந்து வந்ததாக முன்வைத்தார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் அந்தப் பகுதியில் வாழ்ந்ததற்கான சட்டரீதியான ஆவணங்களை கடந்த 10 ஆம் திகதி வழங்குமாறு நீதவான் கால அவகாசம் வழங்கிய நிலையில் அவர்கள் அதற்கான ஆதாரத்தை வழங்கவில்லை.

இந்நிலையில், இன்று 13 ஆம் திகதி குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்நிலையில், அதிகாரிகளின் எந்தவகையான ஆவணமும் நீதிமன்றுக்கு அத்துமீறி குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் சமர்ப்பிக்கப்படாததால் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் அத்துமீறி குடியேறிய 13 பேரையும் வெளியேறுமாறு நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார். மயிலத்தமடு - மாதவனைப் பகுதியில் அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுமாறு கோரி அப்பகுதி கால்நடை பண்ணையாளர்கள் 60 ஆவது நாளாகவும் இன்றும் போராட்டம் முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவருக்கு பிணை

இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் இன்று(13) ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து பிணை வழங்கப்பட்டுள்ளது. 10 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவர் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

# மதுபானம் அருந்தியவர் மரணம்

குருணாகலில் பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகன்வெலவில் மதுபானம் அருந்திகொண்டிருந்த ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிங்கிரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் குருணாகல், வெல்லவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் என தெரியவந்துள்ளது.

இவர் சக நண்பர்களுடன் மது அருந்திகொண்டிருந்தபோது திடீர் சுகயீனம் காரணமாக பிங்கிரிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதி வழங்க புதிய தீர்மானம்

வெளிநாட்டு போர்க் கப்பல்கள், விமானங்கள், ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குவதற்கான நிலையான இயக்க நடைமுறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் புதுப்பிப்புகள் குறித்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இலங்கையின் மேற்கு கடல் பகுதியில் ஆய்வு பணிக்காக வருவதாக சீனக் கப்பல் அறிவித்தாலும் இந்தியா தனது நாட்டை உளவு பார்ப்பதற்காக குறித்த கப்பல் வருவதாகக் கூறியது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, குறித்த கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கான நிலையான இயக்க நடைமுறையை மீளாய்வு செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

தேசிய பாதுகாப்பு சபையில் இது குறித்து விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பலாங்கொடை மண்சரிவில் நால்வர் மாயம்



பலாங்கொடை கவரன்ஹேன, வெஹிந்தென்னவில் ஏற்பட்ட மண்சரிவில் நால்வர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (12) இரவு பெய்த மழையுடன் கூடிய காலநிலையுடன் பஸ்கந்த பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு 3 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வீடு ஒன்றில் இருந்த தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் தற்போது காணாமல் போயுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு பதிவாகியுள்ளதாகவும் கடும் மழை காரணமாக அப்பகுதிக்குச் செல்வது சிரமமாக இருந்ததால், அவர்கள் தொடர்பில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதி மிகவும் செங்குத்தான பிரதேசம் என்பதுடன் மேலும் பல வீடுகளில் உள்ள மக்களை வெளியேற்ற பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பாடகியின் வீட்டுக்குள் நுழைந்தவர் கைது



கொழும்பின் புறநகர் பகுதியான மாலபே பகுதியில் உள்ள பிரபல பாடகி நிரோஷா விராஜினியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவெல நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல பதில் நீதவான் கமல் விஜேசிறி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன் பலமுறை பாடகியின் வீட்டிற்குள் நுழைய முயன்றுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

# 500,000 பேரின் மின்பாவனை துண்டிப்பு

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை கட்டணம் செலுத்தாததன் காரணமாக 500,000 பேரின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக இலங்கை மின்சாரசபை ஊடகப்பேச்சாரர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.



# ஐ.சி.சியின் தடையால் 500 மில்லியன் டொலர் இழப்பு

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) நாட்டின் உறுப்புரிமைக்கு எதிரான தற்போதைய இடைநீக்கத்தை நீக்காவிட்டால், நாடு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்க நேரிடும் என்று இலங்கை கிரிக்கெட் (எஸ்.எல்.சி) தலைவர் ஷம்மி சில்வா எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,




பல விவாதங்கள் மற்றும் ஆலோசனைகளுக்குப் பிறகுதான் U 19 கிரிக்கெட் உலகக் கிண்ணம், ஐ.சி.சியின் வருடாந்திர பொதுக் கூட்டம் (ஏ.ஜி.எம்) இரண்டையும் நடத்த ஐ.சி.சி அனுமதித்தது. 2027 இல் பெண்கள் உலகக் கோப்பை, 2026 இல் இந்தியாவுடன் இணைந்து ரி20 உலகக் கோப்பையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. ஐ.சி.சி இடைநீக்கம் தொடரும் பட்சத்தில், இலங்கை 50 மில்லியன் அமெரிக்க டொலரை இழக்கும் என அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு விகாரதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை இல்லையா? ஹரீஸ் எம்.பி

மட்டக்களப்பு விகாரதிபதிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காமை ஏமாற்றமளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும். மட்டக்களப்பு விகாரதிபதியாக இருக்கும் அம்பிட்டிய தேரர் அவர்கள் தமிழ் மக்களை துண்டுதுண்டாக வெட்ட வேண்டும், கொல்ல வேண்டும் என்று மிகக்கேவலமான முறையில், மிக மோசமாக தமிழ் மக்கள் தொடர்பில் பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்.

இதனை யாராலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இவருக்கு எதிராக எந்தவொரு சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் வேதனையில் ஆழ்ந்துள்ளது. தேரரின் இந்தக் கருத்தை முஸ்லிம், சிங்கள சமூகமும் வெட்கக்கேடாக நோக்குகிறது. இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிஷ்ட சீட்டு இலக்கத்தை மாற்றிய படைவீரர் கைது

தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான லொத்தர் சீட்டு ஒன்றின் இலக்கத்தை நூதனமான முறையில் மாற்றி லொத்தர் சீட்டு முகவரிடம் 2000 ரூபா பணம் பெற முயற்சித்த படை வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோசடியை கண்டுபிடித்த லொத்தர் சீட்டு முகவர் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தார், இவர் இதற்கு முன்னரும் ஹொரணவில் லொத்தர் சீட்டு முகவர் ஒருவரை ஏமாற்றி பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உலகக்கிண்ண லீக் போட்டியில் தோல்வியடையாத இந்தியா

இந்தியாவில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடிய இந்தியா 9 போட்டிகளிலும் வெற்றி பெற்று புதிய சாதனை படைத்துள்ளது. முன்னதாக உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியா இரண்டு முறையும் இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஆகியன தலா ஒரு முறையும் லீக் போட்டியில் தோல்வியடையாமல் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 410 ஓட்டங்கள் எடுத்தது. 411 என்ற இமாலய இலக்கை நோக்கி விளையாடிய நெதர்லாந்து 47.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 259 ஓட்டங்கள் எடுத்தது. 9 லீக் போட்டிகளில் விளையாடிய நெதர்லாந்து 2 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

வலுவான தென்னாபிரிக்காவை தங்களுடைய வரலாற்றில் முதல்முறையாக தோற்கடித்து சாதனை படைத்தது. நம்பிக்கை நட்சத்திரம் பஸ் டீ லீடி ஆல் ரவுண்டராக நல்ல செயல்பாடுகளை வெளிப்படுத்தினார்.

கப்டன் ரோஹித் சர்மா, சுப்மன் கில் ஜோடி பிளே ஓவர்களைப் பயன்படுத்தி அதிரடியாக விளையாடி 100 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து நல்ல துவக்கத்தைக் கொடுத்தனர்.

ரோஹித் சர்மா 61, கில் 51, விராட் கோலி 51, ஸ்ரேயாஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 128, கே.எல். ராகுல் 102 என இந்தியாவின் ஐந்து வீரர்களும் 50+ ஓட் டங்கள் அடித்தனர்.

உலகக்கோப்பை வரலாற்றில் ஒரு போட்டியில் டாப் 5 பேட்ஸ்மேன்களும் 50க்கும் மேற்பட்ட ஓட்டங்களை அடித்த முதல் அணி என்ற தனித்துவமான உலக சாதனையை இந்தியா படைத்துள்ளது.

**ரோஹித் சர்மாவின் 2 உலக சாதனைகள்**

2023 ஒருநாள் கிரிக்கெட்டில் ரோஹித் சர்மா இதுவரை மொத்தம் 60 சிக்ஸர்கள் அடித்துள்ளார். இதன் கிரிக்கெட்டில் ஒரு காலண்டர் வருடத்தில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற ஏபி டீ வில்லியர்ஸ் சாதனையை உடைத்துள்ள அவர் புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் 2015 ஆம் ஆண்டு ஏபி டீ வில்லியர்ஸ் 58 சிக்ஸர்கள் அடித்ததே முந்தைய உலக சாதனையாகும். 2023 உலகக் கோப்பையில் மட்டும் ரோஹித் சர்மா இது வரை மொத்தம் 24 சிக்ஸர்கள் அடித்துள்ளார். உலகக் கோப்பை வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட தொடரில் அதிக சிக்ஸர்கள் அடித்த கப்டன் என்ற இங்கிலாந்தின் இயன் மோர்கன் சாதனையை உடைத்துள்ள ரோஹித் சர்மா புதிய உலக சாதனை படைத்துள்ளார். 2019 உலகக்கோப்பையில் இங்கிலாந்தின் கப்டனான இயன் மோர்கன் 22 சிக்ஸர்கள் அடித்திருந்ததே முந்தைய சாதனையாகும்.




**ரோஹித்தின் சாதனையை 32 நாட்களில் உடைத்த ராகுல்**

62 பந்துகளிலேயே 100 ஓட்டங்கள் தொட்ட ராகுல் உலகக்கிண்ண வரலாற்றில் அதிவேகமாக சதமடித்த இந்திய வீரர் என்ற மாபெரும் வரலாற்றுச் சாதனையும் படைத்தார். இதற்கு முன் இதே உலகக் கிண்ணத்தில் கடந்த ஒக்ரோபர் 11 ஆம் திகதி 32 நாட்களுக்கு முன்பாக தலைநகர் டெல்லியில் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் கப்டன் ரோஹித் சர்மா 63 பந்துகளில் சதமடித்திருந்ததே முந்தைய சாதனையாகும்.

உலகக்கிண்ண வரலாற்றில் 24 வருடங்கள் கழித்து சதமடித்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையும் அவர் படைத்தார். இவருக்கு முன் கடைசியாக கடந்த 1999 உலகக்கிண்ணத்தில் இலங்கைக்கு எதிராக ஜாம்பவான் மற்றும் தற்போது பயிற்சியாளர் ராகுல் டிராவிட் சதமடித்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தவற விட்ட சதத்தை ராகுல் இப்போது அடித்துள்ளார்.

பெங்களூரை கோட்டையாக்கிய ரோஹித், சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் ஒருநாள், ரி20 ஆகிய அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் ரோஹித்சர்மா 32 சிக்ஸர்கள் அடித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு குறிப்பிட்ட மைதானத்தில் அதிக சிக்ஸர்கள் அடித்த இந்திய வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் வாழ்நாள் சாதனையை ரோஹித் சர்மா உடைத்துள்ளார். இதற்கு முன் சார்ஜா மைதானத்தில் சச்சின் 30 சிக்ஸர்கள் அடித்திருந்ததே முந்தைய ஒரு சாதனையாகும்.

9 போட்டிகளில் 503 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதன் வாயிலாக உலகக் கிண்ண வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட தொடரில் 500 ஓட்டங்கள் முதல் இந்திய கப்டன் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்துள்ளார்.

உலகக்கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் அடித்த இந்திய கப்டன் என்ற சௌரவ் கங்குலியின் சாதனையை உடைத்துள்ள அவர் புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

1. ரோஹித் சர்மா : 503 (2023)
2. சௌரவ் கங்குலி : 465 (2003)
3. விராட் கோலி : 443 (2019)
4. முகமது அசாருதீன் : 332 (1992)

2019 இல் 648 ஓட்டங்கள் அடித்த ரோஹித் இந்த உலகக்கிண்ணத்தில் கோப்பையில் 503 ஓட்டங்கள் எடுத்துள்ளார். உலகக் கிண்ண வரலாற்றில் அடுத்தடுத்த தொடர்களில் 500 இற்கும் மேற்பட்ட ஓட்டங்கள் அடித்த முதல் வீரர் என்ற மாபெரும் உலக சாதனை ரோஹித் சர்மா படைத்துள்ளார்.

7 வருடங்களின் பின் விக்கெட் வீழ்த்திய கிங் கோலி இந்தப் போட்டியில் 3 ஓவர்கள் பந்து வீசிய விராட் கோலி 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். 25 ஆவது ஓவரின் 3 ஆவது பந்தில் எட்வர்ட்ஸ் 17 ஓட்டங்களில் கொடுத்த எட்ஜை கே.எல்.ராகுல் கச்சிதமாக பிடித்ததால் ஆச்சரியமான விக்கெட்டை எடுத்து ரசிகர்களைக் கொண்டாட்டத்தில் ஆழ்த்தினார்.

குறிப்பாக, பேட்ஸ்மேனாக ஒவ்வொரு போட்டியிலும் ரன்கள் அடித்ததை மட்டுமே பார்த்து பழகிய ரசிகர்கள் விராட் கோலியின் விக்கெட்டை வெறித்தனமாக கொண்டாடினார்கள். கடந்த 2016 ஆம் ஆண்டு ரி20 உலகக்கிண்ண செமி ஃபைனலில் மேற்கு இந்திய வீரர் கஜான்சன் சார்லஸ் விக்கெட்டை விராட் கோலி எடுத்திருந்தார்.

சுப்மன்கில், சூரியகுமார் யாதவ் ஆகியோர் தலா இரண்டு ஓவர்கள் பந்து வீசினர். 47 ஆவது ஓவரை கப்டன் ரோஹித் வீசினார். 5 ஆவது பந்தில் நெதர்லாந்தின் கடைசி விக்கெட் வீழ்ந்தது. தசைப் பிடிப்பு காரணமாக வேகப் பந்து வீச்சாளர் சிராஜ் வெளியேறியதால் துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீசினர்.

**இந்தியாவின் உலக சாதனைகள்**

நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர்கள் 16 சிக்ஸர்கள் அடித்தனர். 2023 காலண்டர் வருடத்தில் இதுவரை இந்தியா ஒருநாள் கிரிக்கெட்டில் மொத்தம் 215 சிக்ஸர்களை அடித்துள்ளது. ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரு காலண்டர் வருடத்தில் அதிக சிக்ஸர்கள் அடித்த அணி என்ற மேற்கு இந்தியாவின் சாதனையை உடைத்து இந்தியா புதிய உலக சாதனையைப் படைத்துள்ளது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 13.11.2023 அன்று வெளியிடப்பட்டது.